## பொதுக்காலம் 2ஆம் ஞாயிறு - இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

காலைக் கதிரவன் கண்பட்டதும் இருள் நீங்கி உலகம் ஒளி பெறுவது போல, கவலைகள் மறைந்து நம் மனங்களும் மகிழ்ச்சியில் நிறையட்டும் என்று கூறி பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்புடனே வரவேற்கிறோம்.

சாமுவேலை இறைவன் அழைக்கும் முதல் வாசகத்தினை மனதில் நிறுத்துவோம். இறைவன் அழைப்பை மூன்று முறை சாமுவேல் அறியவில்லை. ஆனாலும் இறைவன் சாமுவேலை தம் அன்பால் அரவணைத்து மேன்மையாக்கினார்.

இன்றைய சூழலில் இயற்கையும் நம்மை அழைக்கிறது. நம்மை நோக்கி கூக்குரலிடுகிறது. செவிகளை இழந்த நாம், நமது நாகரீக வளர்ச்சிக்கு தடையாக உள்ளது என்று இயற்கையை சிதைத்துவிட்டு வானம் பொய்த்து விட்டதென்று வழிதவறி பயணிக்கிறோம். மலிவாய் கிடைத்ததென்று விளை நிலத்தை வீட்டுமனையாக்கி விட்டோம். நாம் குளிர் அறையில் இருந்து ருசிக்கும் உணவை உருவாக்கியவன் வெற்றுடம்பாய் வெயிலில் கருகிக்கொண்டிருக்கிறான். உலகிற்கே உணவளித்தவன் தன் பசியாற கையேந்தி நிற்கிறான். பசியாலும் கடனாலும் மடிந்து கொண்டிருக்கின்றான். இதன் காரணம்தான் என்ன? இறைவன் அழைப்பை தாமதமாக அறிந்து கொண்ட சாமுவேலைப் போல இயற்கை அரவணைப்பை தாமதமாகவே புரிந்துகொண்டோம்.

இன்றைய இரண்டாம் வாசகமும் நம் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள் என்று கூறி மானிட இனத்தை மகிமைப்படுத்துகிறது. நம் உடல்கள் தூய ஆவி தங்கும் கோவில் என்று நமக்கு மகுடம் சூட்டுகிறது. அத்தகைய மகுடங்கள் கோபுரத்தில் சூட்ட வேண்டுமே தவிர குப்பை மேட்டில் அல்ல. விவிலியம்

கூறும் பரத்தைமை என்பது இன்று பரவலாகிவிட்டது என்பதை விட பேஷனாகி விட்டது என்பதே நிஜம். ஆம், அத்தனை தொலைக்காட்சி நிகழ்வுகளும் உடல்களால் செய்யும் பாவத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆண், பெண் இருபாலெனினும் கற்பு என்பது பொதுவானது என்பது மறுக்கப்படுகிறது; மறக்கப்படுகிறது. ஆண்டவர் தம் சீடர்களிடம் "வந்து பாருங்கள்" என்று தம் இருப்பிடம் அழைக்கிறார். இறைவன் இல்லம் காண, நமது செயல்களுக்காய் இறைவனிடம் மன்னிப்பைக் கேட்டு இறைவன் தந்த இயற்கை நம்மை அணைக்கும்படி வாழ்வோம். பாவத்தினை ரசிக்காமல் பாதையை மாற்றி பரமன் பதம் போற்றி நடப்போம். நம் மனங்களில் மகிழ்ச்சி பொங்க இத்திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. வந்து பாருங்கள் என்று அழைத்தவரே எம் இறைவா!

உமது திருப்பணி செய்ய முன்வந்துள்ள எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் தங்கள் அழைப்பின் இறை நோக்கத்தை நிறைவேற்றி, தங்கள் பணி வாழ்வை பலப்படுத்திட அவர்களோடு உடனிருந்து வழிகாட்ட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. சாமுவேலை அழைத்து மேன்மைப்படுத்தியவரே எம் இறைவா!

உமது அழைப்பை நாங்கள் உணர்ந்து, உமக்கு உகந்த வழியினில் நடந்து, வாழ்வின் நற்கனிகளை பெற்று, வாழ்ந்திட வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. இயற்கையின் இன்பத்தை படைத்தவரே எம் இறைவா!

பாதுகாக்க வேண்டிய இயற்கையை பரிதவிக்க விடாமல், வீடும் நாடும் செழித்து, சந்தோசமும், அமைதியும் பொங்கி வழிய வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அழைத்தலின் ஆண்டவரே எம் இறைவா!

சமூகப் பணியாற்ற அழைத்த நாட்டுத் தலைவர்கள், நேரிய வழியில் நடந்து, மக்களின் நலனை மனதிற் கொண்டு, நல் திட்டங்களை செயல்களாக்கி, நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்து செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. மகிழ்ச்சியின் மன்னவனே எம் இறைவா!

எங்கள் பகுதியில் தேவையான மழை பொழிந்து, நீர் நிலைகள் நிறைந்து விவசாயம் செழிக்கவும், எம் விவசாயிகளின் மனங்கள் சந்தோசத்தில் பொங்கவும், அனைத்து உள்ளங்களும் இல்லங்களும் உமது ஆசியைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660;

www.arulvakku.com